Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 18 2025

திங்கட்கிழமை 18, ஒகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 030 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## மூன்றாம் தவணை இன்று ஆரம்பம்

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற, தமிழ்,சிங்கள பாடசாலைகளின் மூன்றாம் தவணை திங்கட்கிழமை(18) ஆரம்பமாகும். இரண்டாவது தவணை கடந்த 7ஆம் திகதி நிறைவடைந்தது. இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

## பாகிஸ்தான் வெள்ளத்தில் 400 பேர் பலி




பாகிஸ்தானில் கைபர் பக்துன்க்வா, ஆசாத் காஷ்மீர் மற்றும் கில்கிட்- ஆகிய பகுதிகளில் கனமழை மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டமையால் 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

பெருமழையால் நிலச்சரிவுகள், சாலைகள் இடிந்து விழுந்தமை மற்றும் பெருக்கெடுத்து ஓடிய ஆறுகள் பாலங்கள், வீடுகள் மற்றும் முழு கிராமங்களையும் அடித்துச் சென்றன.

பனிப்பாறை ஓடைகள் மற்றும் திடீர் வெள்ளம் பல பகுதிகளை சேதப்படுத்தியது. பாலங்கள் ஆறுகளில் இடிந்து விழுந்தன, ஓடையில் பலர் அடித்துச் செல்லப்பட்டனர்,

கடந்த 48 மணி நேரத்தில் புதுப்பிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் பிரகாரம் 400க்கும் மேற்பட்டோர் இறந்தனர். அவர்களில் 279 ஆண்கள், 15 பெண்கள் மற்றும் 13 குழந்தைகள் அடங்குவர்.

தொடர்ச்சி P2



## வடக்கு,கிழக்கில் இன்று

# ஹர்த்தாலுக்கு அழைப்பு; எதிர்ப்பு

வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவப் பிரசன்னத்திற்கும் காணி அபகரிப்புக்கும் எதிர்ப்புத் தெரிவித்து, இன்று திங்கட்கிழமை(18) முழு கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்பதாக பலரும் அறிவித்துள்ளனர். எனினும், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த வர்த்தக சங்கங்கள் பல, தங்களால் கடைகளை இன்றையதினம் (18) மூட முடியாது என்றும், கடையடைப்பு அழைப்புக்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு, முத்தையன்கட்டு இராணுவ முகாமிற்குச் சென்ற இளைஞர்களில் ஒருவர் கொல்லப்பட்டமை கண்டித்தும் வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னத்தைக் குறைக்குமாறு வலியுறுத்தியும், ஒகஸ்ட் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தால், இன்று திங்கட்கிழமைக்கு (17) வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு, முத்தையன் கட்டுப் பகுதியில் வசித்து வரும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது பொருளாதார நிலை காரணமாக வீடு அமைப்பதற்கான தகரத்தைப் பெறுவதற்காக இராணுவத்தினரின் அழைப்பின் பேரில் இராணுவ முகாமிற்கு வேறு சிலருடன் சென்றுள்ளார்.

குறித்த பகுதியில் நின்ற இராணுவத்தினர் குறித்த இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அவர்கள் அச்சத்தின் காரணமாக ஓடியுள்ளதுடன், ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதனையடுத்தே, வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னத்தைக் குறைக்குமாறு வலியுறுத்தி, இலங்கை தமிழரசு கட்சியால், ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியால் விடுகப்பட்டள்ள நிர்வாக முடக்கல் போராட்டத்திற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள், தங்களின் தார்மீக ஆதரவையும் தெரிவித்திருக்கின்றன.

வடக்கு கிழக்கில் அதிகரித்துவரும் காணி அபகரிப்பு மற்றும் இராணுவ பிரசன்னத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழரசுக் கட்சியினால் விடுக்கப்பட்டுள்ள அழைப்புக்கு வலுசேர்க்கும் வகையில், திருகோணமலை மூன்றாம் கட்டை சந்திப் பகுதியில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கை சனிக்கிழமை (16) முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் உள்ள வர்த்தக சங்கங்கள் பல, இன்றைய (18) கடையடைப்பு போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இன்று திங்கட்கிழமை (18) என்பதால், வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். காசோலைகளுக்கான கட்டணங்களைச் செலுத்தவேண்டும் என்பதுடன், அன்றாடம் தொழிலாளிகளுக்கு நாள் சம்பளத்தைச் செலுத்தவேண்டும் என்றும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களை நம்பி வாழும், தொழிலாளர்களுக்கு அன்றாட நாட்கூலியை வழங்காவிடின், அவர்களின் குடும்பத்தினருக்கு அன்றைய நாளுக்கு உரிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகையால், இன்றைய போராட்டத்துக்கு தங்களால் ஆதரவைத் தெரிவிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.





## "இழந்த வாக்கு வங்கியை அதிகரிக்கவே கதவடைப்பு"

■ மு.தமிழ்ச்செல்வன்

இழந்து போன தங்களுடைய வாக்குவங்கியை அதிகரிக்கவே கதவடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து நெடுஞ்சாலைகள், புகையிரத சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## நீரில் மூழ்கி 257 பேர் பலி

இந்த ஆண்டில் (2025) இதுவரை நீரில் மூழ்கி 257 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் 37 பெண்கள் மற்றும் 220 ஆண்கள் அடங்குவர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யு. வுட்லர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், நீரில் மூழ்கிய விபத்துக்களில் இருந்து உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் 69 பேரையும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 33 பேரையும் பொலிஸ் உயிர்காக்கும் பிரிவு மீட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## 16% சதவீதமாக குடும்பங்கள் பட்டினியில்

இலங்கையில் உள்ள குடும்பங்களில் 16 சதவீதமான குடும்பங்களுக்குப் போதிய, சத்தான உணவு கிடைப்பதில்லை என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் அலுவலகம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி சுட்டிக்காட்டுகிறது.

பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்குப் போதிய, சத்தான உணவு கிடைப்பதில்லை எனவும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2



## USS SANTA BARBARA கப்பல் வந்தடைந்தது

கொழும்பு துறைமுகத்திற்கு ஆகஸ்ட் 16ஆம் திகதி வருகைதந்த USS SANTA BARBARA (LCS)என்ற அமெரிக்க கடற்படையின் போர் கப்பலைபாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) பார்வையிட்டார்.

பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தா (ஓய்வு) மற்றும் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொடவும் இதன் போது கலந்துக்கொண்டனர்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்னல் மேத்யூ ஹவுஸ் ஆகியோர் அதிதிகளை வரவேற்றனர்.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவுகளை பிரதிபலிக்கிறது.

இலங்கை மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இடையிலான கடல்சார் பாதுகாப்பு, பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்களில் ஒத்துழைப்புக்கான எதிர்கால வழிகளை ஆராய இந்த விஜயம் உதவியாக அமைந்துள்ளது.

இந்த விஜயத்தின் போது, USS SANTA BARBARAவின் கட்டளை அதிகாரி கொமாண்டர் அடம் ஜே ஒச்ஸ் (Commander Adam J Ochs) கப்பலின் திறன்கள் மற்றும் அதன் சிறப்பம்சங்கள் குறித்த விரிவான விளக்கத்தை அவர்களுக்கு வழங்கினார்.

இந்த விஜயம், USS SANTA BABARAவின் கொழும்பு துறைமுகத்திற்கான முதல் பயணத்தைக் குறிக்கிறது, இது அமெரிக்க-இலங்கை கூட்டாண்மையின் வலிமையையும், பாதுகாப்பான, வளமான மற்றும் சுதந்திரமான இந்து -பசுபிக் சமுத்திரத்திற்கானபகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.


## "ஒரு சிக்கலான நிலை ஏற்பட்டுள்ளது"



பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது குறித்து தற்போதைய சட்ட பின்னணியைக் கருத்தில் கொண்டு, சபாநாயகர் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டியிருக்கும் என்று வழக்கறிஞர் பேராசிரியர் பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இதற்கு முன்பு ஒரு பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதில்லை என்று கூறிய மஹாநாம ஹேவா, பிரதி அமைச்சருக்கான கடமைகள் ஒதுக்கப்படவில்லை அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை என்றார்.

தற்போதைய சட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்வது சந்தேகத்திற்குரியது என்று கூறிய பேராசிரியர் பிரதிபா மஹாநாம, சபாநாயகர் தனது விருப்பப்படி ஒரு முடிவை எதிர்காலத்தில் எடுப்பார் என்றும் குறிப்பிட்டார்.



### உக்ரைன் போரை நிறுத்த

## "நேரடி அமைதி ஒப்பந்தமே சிறந்த வழி"

### ட்ரம்ப் தெரிவிப்பு: உக்ரைன் ஜனாதிபதியை இன்று சந்திக்கிறார்

உக்ரைன், ரஷியா இடையே 269ஆவது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். பேரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். அந்த வகையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சந்தித்தார்.

அமெரிக்காவின் அலாஸ்காவில் நடந்த இந்த சந்திப்பின்போது உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். ஆனாலும், போர் நிறுத்தம் தொடர்பாக எந்த அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை. புட்டினை சந்தித்த பின்னர் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "இழந்த வாக்கு வங்கியை அதிகரிக்கவே கதவடைப்பு"

முத்தையன்கட்டு பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்தை தொடர்ந்து 18ஆம் திகதி வடக்கு, கிழக்கு முழுவதும் கதவடைப்பு போராட்டத்தை மேற்கொள்ளுமாறு தமிழரசு கட்சியின் சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். உண்மையிலேயே இந்த கதவடைப்பு போராட்டம் தேவையற்றது என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முத்தையன்கட்டு உயிரிழப்புக்கு பின்னர் என்னென்ன சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமோ அவை அனைத்தும் நீதியான முறையில் இடம்பெற்று வருகிறது இந்த நிலையில் இந்த கதவடைப்பு என்பது அரசியல் தரப்பினர் இழந்து போன தங்களின் வாக்கு வங்கியை அதிகரிக்கவே மேற்கொள்கின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த கதவடைப்பு என்பது தமிழ் அரசியல்வாதிகள் இன்னும் மாற தயாரில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது, தமிழ் மக்களின் பிரச்சினைகளை வைத்து அரசியல் செய்யும் அரசியல்வாதிகளுக்கு இவ்வாறான போராட்டங்கள் தேவைப்படுகின்றன. கடந்த காலங்களில் நாட்டில் இராணுவ ஆட்சி போன்ற ஆட்சி நிலைமை காணப்பட்டது ஆனால் இப்போது அப்படியல்ல, இந்த நாட்டில் இன, மத, மொழி ரீதியான வேறுபாடுகளை கடந்து தேசிய ஒற்றுமை உருவாக்கும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம் என்றார்.

முத்தையன்கட்டு சம்பவம் கூட தமிழ் இளைஞன் என்ற காரணத்திற்காக இடம்பெற்றது அல்ல அது நாட்டில் ஏனைய பிரதேசங்களில் இடம்பெறும் சம்பவங்கள் போன்றது எனத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த கதவடைப்பினை வர்த்தகர்களும் பெரும்பாலான தமிழ் மக்களும் நிராகரித்துள்ளனர். ஆனாலும் சில வர்த்தகர்கள் தங்களின் சங்கங்கள் எடுக்கும் தீர்மானத்திற்கு கட்டுப்பட வேண்டியவர்களாக உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

# "நம்பிக்கையில்லா பிரேரணை சிக்கலாகும்"

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் சபாநாயகரிடம் சமர்ப்பித்த நம்பிக்கையில்லா பிரேரணை, சட்ட சிக்கல் காரணமாக விவாதிக்க முடியாத ஒரு பின்னணியை உருவாக்கியுள்ளது என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே, இந்த பிரேரணையை முன்வைப்பதன் சட்டப்பூர்வமான தன்மை குறித்து அதிகாரப்பூர்வமாக விசாரிக்க சட்டமா அதிபருக்கு பணித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

மேலும், இந்த நெருக்கடியான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இந்த பிரேரணையை பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்க வேண்டாம் என்று சபாநாயகர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த பிரேரணை சனிக்கிழமை (16) அன்று பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கத் திட்டமிடப்பட்டது.

வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பிரதி அமைச்சர் அருண ஜெயசேகரவுக்கு ஒரு விடயம் ஒதுக்கப்படாததால், அவருக்கு அதிகாரப்பூர்வமாக ஒரு பொறுப்பு ஒதுக்கப்படாதபோது, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதற்கான சட்டப்பூர்வ சாத்தியம் இல்லை என்று அமைச்சர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்தகைய நபருக்கு எதிராக ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டால், ஒரு பதவி நீக்கப் பிரேரணை மட்டுமே கொண்டு வர முடியும் என்று அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

எனவே, பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று கூறும் அதே அமைச்சர்கள், இலங்கை வரலாற்றில் பிரதி அமைச்சருக்கு எதிராக ஒருபோதும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படவில்லை என்றும் கூறினர்.

# பாகிஸ்தான் வெள்ளத்தில் 400 பேர் பலி

நான்கு பெண்கள் மற்றும் இரண்டு குழந்தைகள் உட்பட குறைந்தது 23 பேர் காயமடைந்தனர்.

ஆசாத் ஜம்மு மற்றும் காஷ்மீரில், ரட்டி கலி ஏரி அருகே 1.5 கிலோமீட்டர் வீதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் 700க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சிக்கிக்கொண்டனர். காலை 7 மணிக்கு தொடங்கிய மீட்புப் பணி பிற்பகல் 3.30 மணிக்கு நிறைவடைந்தது, அனைத்து சுற்றுலாப் பயணிகளும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். நடவடிக்கையின் போது நீலம் பள்ளத்தாக்கிலிருந்து மொத்தம் 98 வாகனங்கள் அகற்றப்பட்டன.

புனேர் மாவட்டத்தில் மிக அதிகமான உயிர் சேதம் ஏற்பட்டது, அங்கு திடீர் வெள்ளம் மற்றும் மேக வெடிப்பு குறைந்தது 184 பேரைக் கொன்றது. இருள் காரணமாக இரவு முழுவதும் மீட்புப் பணிகள் சிறிது நேரம் நிறுத்தி வைக்கப்பட்டன, ஆனால் முதல் வெளிச்சத்தில் மீண்டும் தொடங்கின.

உலகம் முழுவதிலுமிருந்து துக்கத்தின் வெளிப்பாடுகள் குவிந்துள்ளன. சவுதி அரேபியா மற்றும் துருக்கியின் வெளியுறவு அமைச்சகங்கள் பாகிஸ்தானுடன் இதயப்பூர்வமான இரங்கலையும் ஒற்றுமையையும் தெரிவித்து தனித்தனி அறிக்கைகளை வெளியிட்டன.ரஷ்யா, ஈரான், சவூதி அரேபியா வெள்ள இழப்புகளுக்கு பாகிஸ்தானுக்கு இரங்கல் தெரிவிக்கின்றன.

# 16% சதவீதமாக குடும்பங்கள் பட்டினியில்

நாட்டின் அரைவாசிக்கும் மேற்பட்ட குடும்பங்கள், பசியைப் போக்கிக் கொள்வதற்காக உண்ணும் உணவின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும், ஒருவேளை உணவிற்காக உண்ணும் உணவின் அளவைக் குறைப்பதற்கும் அல்லது தங்களுக்கு விருப்பமான உணவை உண்பதைக் குறைப்பதற்கும் தள்ளப்பட்டுள்ளதாகவும் உலக உணவுத் திட்டத்தின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இலங்கைக் குடும்பங்களில் நான்கில் ஒரு பகுதியினர் போதியளவு உணவு வேளைகளை எடுத்துக்கொள்வதில்லை எனவும், இந்தக் காரணங்களால் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே வயதுக்குரிய எடை இல்லாததால் ஏற்படும் மந்தபோசணை அதிகரித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் குறிப்பிடுகிறது.

அதேவேளை, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே 12.2 சதவீதமாக இருந்த மந்த போசணை, 2021 முதல் 2024 வரையான காலப்பகுதியில் 17 சதவீதமாக அதிகரித்துள்ளதாக உயர்ஸ்தானிகர் அலுவலகம் குறிப்பிடுகிறது.

இலங்கைக்கு அதன் கடந்த காலத்திலிருந்து மீள்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும், நாட்டில் உள்நாட்டுப் போர் நிலவிய காலம் உட்பட இதுவரை இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பில் அரசாங்கம், பாதுகாப்புப் படைகள் மற்றும் விடுதலைப் புலிகள் போன்ற ஆயுதக் குழுக்களுக்கு உள்ள பொறுப்பை அந்தந்தத் தரப்பினர் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதன் மூலம் அதற்கு ஒரு ஆரம்பத்தை வழங்க முடியும் எனவும் நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் மோசடி, ஊழல் காரணமாகவும் இலங்கையர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியுடன், 2021 முதல் 2024 வரையான காலப்பகுதியில் நாட்டின் வறுமை இரண்டு மடங்காக, அதாவது 24.5 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும், அது உணவுப் பாதுகாப்பின்மைக்கும் காரணமாக அமைந்துள்ளதாகவும் மேலும் கூறியுள்ளார்.

# "நேரடி அமைதி ஒப்பந்தமே சிறந்த வழி"

அதேவேளை, டொனால்ட் ட்ரம்ப்பை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இன்று திங்கட்கிழமை(18) சந்திக்கிறார். இந்த சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. இந்நிலையில், உக்ரைன் போரை நிறுத்த நேரடி அமைதி ஒப்பந்தமே சிறந்த வழி என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சமூகவலைத்தளத்தில் டிரம்ப் வெளியிட்ட பதிவில், உக்ரைன், ரஷியா இடையே நேரடி அமைதி ஒப்பந்தம் மேற்கொள்வதே இந்த போரை முடிவுக்கு கொண்டுவர சிறந்த வழி என்று அனைத்து தலைவர்களும் முடிவெடுத்துள்ளனர். தற்காலிக போர் நிறுத்தத்தால் எந்த பயனும் இல்லை. தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைந்துள்ளது என்று பதிவிட்டுள்ளார்.

# எரிபொருளில் மோசடி செய்த பொலிஸ் சாரதி கைது

கனகராசா சரவணன்

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் வாகனத்துக்கு வழங்கப்படும் எரிபொருள் (வவுச்சர்) பற்றுச்சீட்டை எரிபொருள் நிலையத்தில் வழங்கி 6 ஆயிரத்து 600 ரூபாய் அரச பணத்தை மோசடி செய்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வாகன சாரதியான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சனிக்கிழமை (16) இரவு பொலிஸ் நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி தெரியவருவதாவது, குறித்த பொலிஸ் நிலையத்தின் வாகனங்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக பொலிஸ் நிலையத்தில் பவுச்சரை பெற்றுக் கொண்டு அதை நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் வழங்கி அதற்கான எரிபொருளை வாகனங்களுக்கு நிரப்பி செல்வது வழமையானது.

இந்த நிலையில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பொலிஸ் ஜீப் வண்டிக்கும் பொலிஸ் நிலையத்தில் உள்ள மின்சார உற்பத்தி செய்யும் இயந்திரமான ஜெனரேற்றருக்கும் டீசலுக்கான (வவுச்சர்) அனுமதி சீட்டை குறித்த சாரதி பெற்றுக் கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று அங்கு 12 ஆயிரத்து 400 ரூபாவுக்கு ஜீப் வண்டிகள் டீசலை நிரப்பிக் கொண்டு ஜெனரேற்றருக்கான 6 ஆயிரத்து 600 ரூபாய் பெறுமதியான டீசலை பெற்றுக் கொள்ளாமல் அதற்கான பணத்தை எரிபொருள் நிலையத்தில் வாங்கி எடுத்துக் கொண்டு சென்றுள்ளார்.

இந்த மோசடி தொடர்பாக புலனாய்வு பிரிவினர் பொலிஸ் உயர் அதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வந்தனர் இதையடுத்து இது தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வந்த நிலையில் அரச பணத்தை மோசடி செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ தினமான சனிக்கிழமை (16) இந்த அரச பண மோசடி தொடர்பாக பொலிஸ் சாரதியாக கடமையாற்றி வரும் 38 வயதுடைய சாரதியை கைது செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் கைது செய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை (17) அன்று ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# "ஊடகவியலாளரை விசாரணைக்கு அழைத்தது எனக்குத் தெரியாது"

மு.தமிழ்ச்செல்வன்

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்பதே எமது அரசின் நிலைப்பாடாகும். எனவே, நாம் அதனை மாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என போக்குவரத்து,நெடுஞ்சாலைகள்,சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) அன்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் உருவாக்கப்பட்டதே எமது கட்சியின் அரசியல் எழுச்சிளை தடை செய்ய வேண்டும் என்பதற்காகவே எனவே இச் சட்டத்தை பற்றி நாம் நன்கு அறிந்துள்ளோம் எனவே பயங்கரவாத தடைச்சட்டதை நீக்குவதே எமது அரசின் நோக்கம் என தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்பு பிரிவு ஊடகவியலாளர்கள் இன்றும் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்படும் சூழ் நிலைகள் தொடர்ந்து நிலவுகிறது. ஞாயிற்றுக்கிழமை (17) அன்றும் முல்லைத்தீவு ஊடகவியலாளர் குமணன் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் இந்த நிலைமை ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடாக காணப்படுகிறது எனக் கேள்வி எழுப்பிய போது பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் ஊடகவியலாளர் விசாரணைக்கு அழைக்கப்பட்ட விடயம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான கணபதிப்பிள்ளை குமணனிடம் ஞாற்றுக்கிழமை சுமார் 7 மணி நேரம் விசாரணையை நடத்தியதன் பின்னர் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அவரை விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# USS SANTA BARBARA...





கொழும்பு துறைமுகத்திற்கு சனிக்கிழமை (16) அன்று வருகைதந்த USS SANTA BARBARA (LCS)என்ற அமெரிக்க கடற்படையின் போர் கப்பலை பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) பார்வையிட்டார்.















# ‘அரியாத்தை’ விருது

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறைப் பெண் சாதனையாளர்களுக்கு ‘அரியாத்தை விருது’ வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மண்ணுக்கு சொந்தமான பெண்கள் உலகத்தின் ஏனைய சரித்திர நாயகிகளுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்களல்லர் என்பதை ‘ஆனையை அடக்கிய அரியாத்தை’ என்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமுளமுனைக் கிராமத்தில் வாழ்ந்த வீரப் பெண்மணியின் வரலாறு நமக்கு உணர்த்துகிறது. அத்தகைய வீரப்பெண்மணியின் ஞாபகார்த்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறைப் பெண் சாதனையாளர்களுக்கு அரியாத்தை விருது மற்றும் பாராட்டுதல்கள் சனிக்கிழமை (16) வழங்கி வைக்கப்பட்டது. மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரதம அதிதியாகவும், வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜாமுருகேசன் கௌரவ அதிதியாகவும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் மற்றும் கிறிசலிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அஷிகா குணசேன ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



## பாதாள உலகினரை ஒடுக்க
# “நுட்பமான திட்டங்கள்”



பாதாள உலக குற்றங்களை ஒடுக்குவதற்கு தற்போதுள்ள அணுகுமுறைகளுக்குப் பதிலாக மிகவும் நுட்பமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக புதிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

முப்படைகள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் குற்றங்களை எதிர்த்துப் போராட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்கர்களை சந்தித்த பின்னர் அவர் இந்தக் கருத்துக்களை கூறியுள்ளார்.

மேலும், நாட்டில் பாதாள உலகக் குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களை தங்கள் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றனர், அலட்சியமான குற்றவாளிகள் குழு வெளிநாடுகளுக்குச் சென்று இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர், எதிர்காலத்தில் இன்டர்போலைத் தொடர்பு கொண்டு அவர்களைக் கைது செய்ய முறையான திட்டம் செயல்படுத்தப்படும்.

பொதுமக்களுக்கு ஐஜிபி அறிமுகப்படுத்திய புதிய வாட்ஸ்அப் எண் மூலம் ஒரே நாளில் 2,000 புகார்கள் பெறப்பட்டிருப்பது, பொதுமக்கள் பொலிஸார் மூலம் தீர்க்க முடியாத ஏராளமான பிரச்சினைகள் இருப்பதைக் காட்டுகிறது, மேலும் எதிர்காலத்தில் அவற்றை முறையாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில், இதுபோன்ற புகார்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படாது.

தற்போதைய அரசியலின் செல்வாக்கு இல்லை, செல்வாக்கு இருந்தால், ஐஜிபியாக தனது கீழ் அதிகாரிகளுக்கு எந்தவொரு குற்றத்தையும் மறைக்கவோ அல்லது புறக்கணிக்கவோ அல்லது அதை விசாரிக்கவோ கூடாது என்று ஒருபோதும் அறிவுறுத்த மாட்டேன்.

கடந்த காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளதாகவும், குற்றவாளிகள் தலைமறைவாக இருப்பதாகவும், இலங்கை பொலிஸ் இந்த அரசியல் சூழலை சமாளிக்க முடியாவிட்டால் அது ஒரு பெரிய பலவீனமாக இருக்கும்.

2020 முதல் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய பதவி உயர்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான பதவி உயர்வு நடைமுறை தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான முதற்கட்ட ஒப்புதல்கள் தேசிய பொலிஸ் ஆணையத்திடம் இருந்து பெறப்பட்டதால், வரும் மாதத்தில் நேர்மறையான பதில் வழங்கப்படும்.

மேலும், பொலிஸ் துறையில் தற்போது சுமார் 30,000 அதிகாரிகள் பற்றாக்குறை இருப்பதாகவும், அடுத்த ஆண்டுகளில் நியமிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

# காய் தேங்காய் தலையில் விழுந்ததில் குழந்தை பலி



பக்கத்து வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்த ஒரு குழந்தையின் தலையில் காய்தேங்காய் விழுந்ததில் குழந்தை உயிரிழந்ததாக உடசிறிகம பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ, பண்டிரிபுவ பகுதியில் சனிக்கிழமை (16) அன்று இடம்பெற்றுள்ள இந்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த ஜீவன் சஸ்மின் என்ற இரண்டு வயது குழந்தையே உயிரிழந்தள்து.

பக்கத்து வீட்டில் வசித்து வந்த மற்றொரு குழந்தையுடன் அந்த வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது, குழந்தையின் தலையில் தேங்காய் விழுந்துள்ளது.

இதில் குழந்தை மயக்கமடைந்ததால், மூத்த குழந்தையின் அலறல் சத்தம் கேட்டுள்ளது. இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பெற்றோர், குழந்தையை உடனடியாக லுனுவில மருத்துவமனையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆபத்தான நிலையில் இருந்த குழந்தையை மேலதிக சிகிச்சைக்காக மருத்துவமனை அதிகாரிகள் மாரவில மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். பின்னர், மோசமான நிலை காரணமாக, குழந்தை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது, ஆனால், குழந்தை அங்கேயே இறந்துள்ளது.

## அரசியல் அனுபவங்கள் குறித்த
# இந்திய எம்.பியுடன் ஜீவன் பேச்சு



பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸின் முக்கிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சஷி தரூரை சனிக்கிழமை (16) அன்று கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது, தற்போது இந்திய வெளியுறவுக் குழுவின் தலைவராகப் பணியாற்றி வரும் சஷி தரூரின் கருத்துக்கள் மற்றும் அரசியல் அனுபவங்கள் குறித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு அரிய வாய்ப்பாக அமைந்தது என பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும், சிறந்த அரசியல்வாதி, சிந்தனையாளர், எழுத்தாளர் எனப் பல பரிமாணங்களில் விளங்கும் சஷி தரூரின் பணி எப்போதும் ஊக்கமளிப்பதாகும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



# கரணமடித்த டிரக்டர்: 12 பேர் காயம்

தெஹியோவிட்ட பொலிஸ் பிரிவில், சனிக்கிழமை (17) அன்று பணியாளர்களை ஏற்றிக்கொண்டு சென்ற டிரக்டர் நடுவீதியில் புரண்டதில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்த 12 பேரில், எட்டுபேர் கரவனெல்ல வைத்தியசாலையிலும், நால்வர் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ட்ரக்டரின் சாரதி கைது செய்யப்பட்டு, அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## உணவகத்தில் தாக்குதல்:
# கணவன் பலி: மனைவி படுகாயம்

துனகஹா-கொடிகமுவ சாலையில் உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த ஒருவர் கம்பஹா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக திவுலபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். இறந்தவர் இத்தகொதெல்ல பகுதியைச் சேர்ந்தவர்.

உணவகத்தில் இறந்தவரின் மனைவிக்கு நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரிக்கச் சென்றபோது, உணவகத்தின் உரிமையாளரும் மேலும் இரண்டு பேரும் தம்பதியினரைத் தாக்கியதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த மனைவி திவுலபிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தலைமறைவான சந்தேக நபர்களைக் கைது செய்ய விசாரணைகள் நடந்து வருகின்றன.



# நீர் அரக்கனிடம் இழக்கப்படும் இளம் உயிர்கள்

2025ஆம் ஆண்டு ஒகஸ்ட் 16ஆம் திகதி வரையிலும், நாடு முழுவதும் நீரில் மூழ்கிய சம்பவங்களில் 257 பேர் இறந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 220 ஆண்களும் 37 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கிடையில் நீரில் மூழ்கிய 102 பேரை , பொலிஸ் உயிர்காக்கும் பிரிவு மீட்டுள்ளது. இதில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் 69 பேரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 33 பேரும் அடங்குகின்றனர்.

கவனக்குறைவாகப் படகு சவாரி செய்தல், நீச்சல் அடித்தல், நீர்நிலைகளுக்குத் தவறி விழுந்துவிடல், பாலங்களில் இருந்து குதித்தல் அல்லது மது அருந்திய பிறகு குளித்தல் போன்றவற்றால் நீர்நிலைகளில் இவ்வாறான இழப்புகள் ஏற்படுகின்றன.

நீரில் மூழ்கும் பெரும்பாலான மக்கள் கவனக்குறைவால் இறக்கின்றனர். வெள்ளம் ஏற்படும் போது, இளம் தலைமுறையினர் பெரும்பாலும் வெள்ள நீரில் படகோட்டி மகிழ்வார்கள். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க பாலங்களில் இருந்து குதிக்கின்றனர். தாங்கள் அறியாத பகுதிகளில் ஆறுகள், ஓடைகள் மற்றும் கடலில் குளிக்கிறார்கள். இது மிகவும் ஆபத்தான சூழ்நிலை.

கவனக்குறைவு காரணமாக பல இளம் உயிர்கள் நீர் அரக்கனிடம் இழக்கப்படுகின்றன. எதற்கும் கவனம் செலுத்தாமல் தற்காலிக மகிழ்ச்சிக்காக அவர்கள் வாழ்நாள் முழுவதும் விலை கொடுக்க வேண்டும்.

நாடு முழுவதும் ஆறுகள், ஓடைகள் மற்றும் கடற்கரைகளில் பல இடங்களில் எச்சரிக்கை பலகைகள் நிறுவப்பட்டிருந்தாலும், அந்த இடங்களுக்குச் சென்று குளிப்பதற்கோ அல்லது தண்ணீரில் விளையாடுவதற்கோ இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஆறுகள் மற்றும் ஓடைகள் அமைந்துள்ள பல கிராமங்களின் கிராமவாசிகள் குளிப்பதை விரும்பாதது நல்லதல்ல என்பதை அறிந்திருந்தாலும், கிராமத்திற்கு வெளியே இருந்து இந்த இடங்களுக்கு வரும் பலர் கிராமவாசிகளின் அறிவுரைகளைக் கேட்டுக் குளிப்பதில் ஈடுபடுவதில்லை. இறுதியில், அவர்கள் தங்கள் உயிரையே விலையாகக் கொடுக்கிறார்கள்.

பாடசாலை குழந்தைகளில் பலர் தங்கள் பெற்றோர் அருகில் இருக்கும்போது இறக்கின்றனர். அவர்கள் சுற்றுலா சென்று ஆறுகள் மற்றும் ஓடைகளுக்கு அருகில் வேடிக்கை பார்க்கும்போது, பெற்றோர்கள் மகிழ்ச்சியாகவும், அரட்டையடித்தும், மது அருந்தியும், குழந்தைகள் தெரியாத ஓடைகளில் குளிக்கச் சென்று தங்கள் விலைமதிப்பற்ற வாழ்க்கையை இழக்கின்றனர்.

தண்ணீர் வேடிக்கை பார்ப்பதற்கான இடம் அல்ல. மக்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். நீரில் மூழ்குவது தன்னுயிரை மாய்த்துக்கொள்வதைப் போன்றது. அது தெரிந்தே ஒருவரின் சொந்த உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதாகும்

சிலர் ஆபத்துகளை எச்சரிக்கும் சில எச்சரிக்கை பலகைகளை அகற்றுகிறார்கள். குளிப்பதற்குத் தெரியாத பகுதிக்குச் செல்லும் மக்கள் அத்தகைய எச்சரிக்கை பலகைகள் இல்லாததைக் கண்டு மகிழ்ச்சி அடைய முயற்சிக்கிறார்கள். சிலர் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் ஆர்வமாக இருப்பதால் இந்த எச்சரிக்கை பலகைகளை பெரும்பாலும் அகற்றுகிறார்கள். இது ஒரு சமூகப் பிரச்சனை. ஆபத்து அறிகுறிகளை அறியாமையால் இது அதிக உயிர்களை இழக்க வழிவகுக்கிறது.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# பிசுபிசுக்கும் சர்வதேச நீதி கோரல்?

லக்ஸ்மன்

வடக்கு கிழக்கில் ஹர்த்தாலுக்கு இலங்கை தமிழரசுக் கட்சியால் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முழுமையான மக்கள் ஆதரவு கிடைக்குமா? இல்லையா? என்பதை ஒரு புறம் வைத்துக் கொள்வோம். இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதாக ஒரு சில தரப்புகளும், ஆதரவு வழங்கமாட்டோம், வழங்கக் கூடாது

என்ற வகையில் மற்றொரு தரப்பும் என்று நிலைப்பாடு வெவ்வேறாக இருந்து கொண்டிருக்கிறது.

வடக்கு கிழக்கில் நடைபெற்ற யுத்த காலத்தில் காணாமல் ஆகப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை அரசு வெளிப்படுத்த வேண்டும், அவர்களுக்கான நீதி வழங்கப்படவேண்டும் என்று தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அப் போராட்டங்களை நடத்திவருகின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒவ்வொருவராக மரணமாகிக் கொண்டு இருக்கின்றனர். இருந்தாலும் அப்போராட்டமானது தொடர்ந்து கொண்டிருக்கிறது. நாட்டுக்கு கடந்த மாதத்தில் விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும் அவர்களைச் சந்தித்திருந்தார்.

கடந்த காலங்களில் ஜனாதிபதிகளாக இருந்தவர்கள், அரசாங்கத்தின் பிரதமர், அமைச்சர்கள் காணாமலாக்கப்பட்டமை என்கிற விடயத்தினை ஏற்றுக்கொள்ளவே அஞ்சி அது தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கும் தயங்கியிருந்தனர். அதனால் அவர்கள் அவ்விவகாரம் குறித்து பேசுவதேயில்லை. அல்லது அவ்வாறு ஒரு தரப்பு இல்லை என்றவாறாகவே கருத்துக்களை வெளியிட முயன்றிருந்தனர். இதற்கிடையில் தான், கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற, ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடுவரகெதர மற்றும் எம்.எப். எம்.பஸீர் ஆகியோர் எழுதிய ‘செம்மணி’ புத்தக வெளியீடு மற்றும் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் மனிதப் புதைகுழிகள் எனும் தலைப்பிலான கலந்துரையாடலில் கலந்து கொண்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் வெளியிட்ட கருத்து கொஞ்சம் சிந்திக்க வைக்கிறது. அவருடைய கருத்து முன்னைய அரசாங்கத்தின் கருத்தா, பெரும்பான்மை மக்களின் சிந்தனையா என்று எண்ணவும் தோன்றுகின்றது.

“இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் இடம்பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்புகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்விவகாரத்துக்கு சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்றதொரு விடயமாகும். எனவே, நாம் உள்ளகப் பொறிமுறையை மேலும் பலப்படுத்த வேண்டும்” என்பது அவரது கருத்தாகும்.

2018ஆம் ஆண்டு முதல் இரண்டு வருடங்கள் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளராக இருந்த ஒருவருடைய கருத்து கவனிக்கப்படவேண்டியதே. ஆனாலும், முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டதும் அதற்கு

நிதி ஒதுக்கியதாகக் கூறப்பட்டதையும் பின்னர் அவர் தன்முனைப்பில் மேற்கொண்ட வேலைகள் குறித்தும் வெளியிட்ட கருத்துக்கள் அந்த அலுவலகத்தின் அன்றைய, தற்போதைய நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருக்கிறது எனலாம். நீதியமைச்சின் கீழ் இயங்கும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் சுதந்திரமாகச் செயற்படமுடியாது என்பதும் அரசாங்கத்தின் வெறும் கண்துடைப்பான செயற்பாடே காணாமல் போனோர்பற்றிய அலுவலகம் என்பதும் இதிலிருந்து புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அதன்படி, தமிழ் மக்கள் இந்த அலுவலகத்தினை மறுத்தமைக்கான நல்லதொரு எடுத்துக்காட்டாகவும் இதனைக் கொள்ளலாம்.

2015 ஒக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் பிரித்தானியாவின் ஆதரவுடன், அமெரிக்காவால் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின்போது, இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் தொடர்பில் நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதே அத்தீர்மானம். ஒருவகையில் முழுமையான உள்ளகப் பொறிமுறையே அது. நல்லிணக்கத்தை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு காணாமல் போனோரை கண்டறிவதற்கான அலுவலகம், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமைக்கான ஆணைக்குழு, நீதிக்கான பொறிமுறை, இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகிய நான்கு முக்கிய விடயங்களை உள்ளடக்கிய 25 தீர்மானங்கள் இதில் அடங்கும். இந்த தீர்மானம் நல்லாட்சி எனப்படும் பிரதமர் ரணில் - ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேறியது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நிலைமாறு கால நீதிச் செயற்பாடு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் என அரசு நல்லெண்ண சமிக்ஞையைக் காண்பிக்கும் வகையிலான செயற்பாடுகளை ஆரம்பித்தது. அதில் அரசினால்

ஸ்தாபிக்கப்பட்ட இந்த அலுவலகங்களில் சிறிதும் நம்பிக்கையில்லாமல் வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்தும் சர்வதேச நீதியை எதிர்பார்த்துப் போராடி வருகின்றனர். இந்த நிலையில், சர்வதேச நீதிக்கு சாத்தியமில்லை என்று காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளர் கருத்துப் பகிர்வது உண்மையாகக்கூட இருக்கலாம். 2009 மே 18இல் முள்ளிவாய்க்காலில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருகையில் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய கோட்டபாய ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கையின் ஜனாதிபதியானதையடுத்து 2020ஆம் ஆண்டு பெப்ரவரியில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மானத்திலிருந்து தாம் வெளியேறுவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. நல்லாட்சி அரசு தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியமை பெரிய தவறு எனச்சுட்டிக்காட்டி, வெளிநாட்டு நீதிபதிகள் குழு விசாரணை செய்யமுடியாது என்றும் அரசாங்கம் தெரிவித்தது. இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் மிக முக்கியமானதாகவே உலகளவில் வாழும் தமிழர்களாலும் அங்குள்ள அமைப்புக்களாலும் பார்க்கப்பட்டாலும் அது புஸ்வானமாக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவுகளின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் வடக்கு கிழக்கில் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. அவற்றின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இப்போதும் தொடர்வதாகப் பாசாங்கு காண்பிக்கப்படுகிறது. இவ்வருடத்தில், நடைபெறவுள்ள மனித உரிமைப் பேரவை

அமர்விலும் இவ்விடயங்கள் அரசாங்கத்தால் பட்டியலிடப்படும். யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்த பின்னரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி வழங்கப்படாத நிலையில், உறவுகள் எவ்வாறு

அரசாங்கத்தை நம்புவது என்பதுதான் இந்த இடத்தில் சிக்கலானது. இந்தச் சிக்கலுக்குப் பதிலைச் சொல்ல வேண்டிய சாலிய பீரிஸ், போராட்டத்தையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு சர்வதேச நீதி சாத்தியமில்லை என்று கூறுவது வேறு போக்கிலேயே சிந்திக்கத் தூண்டுகிறது.

இருந்தாலும், வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலம் ஆக்கப்படல் சம்பவங்கள் இடம்பெற்றனவா என்ற சந்தேகத்துடனேயே வாழும் தெற்கு வாசிகளுக்கு சாலிய பீரிசின் கருத்துக்கள் உண்மையான சில தெளிவுகளைக் கொடுக்கலாம். அத்துடன், அந்த உண்மையை அரசும், அரசு சாராத தரப்புக்களும் ஏற்றுக்கொள்ளும் நிலைகூட உருவாகலாம். ஆனால், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டில் ஒரு இனப்பிரச்சினை இருப்பதாகவோ, காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம் நடத்துவதைப் பற்றியே சிந்திக்காத, வெறுமனே கடந்து செல்ல முனைகையில், இவற்றைப் பற்றிப்பேசுவதால் பலன் கிடைக்குமா?

என்று சிந்திக்கவும் தோன்றுகிறது. காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தாபிக்கப்பட்டதும், நகர்த்தப்படுவதும் மனித உரிமைப் பேரவையின் செப்டெம்பர் அமர்வை நோக்கியதா என்று சந்தேகிக்கவும் தோன்றுகிறது.

இன்னமும் ஐ.நா. சபையானது தமக்குரிய நீதியை வழங்கும் என்ற ஏக்கமான எதிர்பார்ப்புடனேயே இருந்து வருகின்ற தமிழ் மக்கள் ஒவ்வொரு வருடத்தினது மார்ச் மற்றும், செப்ரம்பர் மாதங்களில் தம்முடைய எதிர்பார்ப்பை அதிகப்படுத்திக் கொள்வது வழக்கமானது. இப்போது, மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம் நடைபெற்றதா என்று கேட்குமளவிற்கு நிலைமை மாற்றமடைந்து விட்டது. இருந்தாலும், தொடரும் நம்மவர்களும் கூட கண்டுகொள்ளாத, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரும் போராட்டம் யாரும் கவனத்திலேயே எடுக்கப்படாத ஒன்றாக மாறிவருவது கவலைக்குரியதே. சாலிய பீரிஸ் கூறுவது போல், இவ்விவகாரத்துக்கு சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்றதொரு விடயமாக இருந்தாலும், ‘வலிந்து காணாமலாக்கப்படல்” என்ற வார்த்தையைக்கூட, பயன்படுத்தாமலிருக்கின்ற இந்த அரசாங்கத்தினால் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வழங்கமுடியுமா என்பது கேள்விக்கானதே.

எவ்வாறாயினும், நாட்டில் மீண்டும் இவ்வாறான காணாமல் போதல்கள் நடைபெறக் கூடாதானால், கடந்த காலங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்படுவது கட்டாயமாகும். அதே நேரத்தில், அரசியல் நலன்களுக்கு அப்பாற்பட்டு அது தீர்த்துவைக்கப்படவேண்டும் என்பதும் கட்டாயமானது. இருந்தாலும் வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கோரிவரும் சர்வதேச நீதியின் அடிப்படையிலான வெளிப்படுத்தலே ஏற்றுக் கொள்ளக்கூடியதாயிருக்கும்.

ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கவில்லை என்பதுபோல் இன்றைய நிலையில், வடக்கு கிழக்கில் காணாமலாக்கப்பட்டோருக்கும் நீதி கிடைக்காது போனால் அது அரசாங்கத்தின் தவறே.



## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன்பற்றி, அக்றை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பை தானாகவே மாற்றிவிடுகின்றது.

வாவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்தபோன வண்ணமே உள்ளன.


வாழ்க்கை என்பது அற்புதமான தேன்கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களில் இருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழுவடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளம்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே, சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்



### மின் குமிழ்கள் ஒளிராததால் மக்கள் அவதி

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரிலும் ஏனைய பகுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள வீதியின் மின் குமிழ்கள் ஒளிராததால் அப்பகுதி மக்கள் இரவு நேரங்களில் கடும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் இரவு நேரங்களில் பயணிக்கும் மாணவர்கள், முதியவர்கள் நோயாளிகள் பாரிய அளவில் இன்னல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாக மஸ்கெலியா பிரதேச சபையினர் கவனம் செலுத்தி மின் குமிழ்களை ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- செ.தி.பெருமாள்



### உளவியல் கண்ணோட்டத்தில்

# காதல்: சரியா தவறா?



வே.வதுஸ்சன்,
உளவியல் சிறப்பு கலை,
யாழ். பல்கலைக்கழகம்.

காதல் என்பது மனித அனுபவங்களில் மிகவும் ஆழமானதும் சிக்கலானதுமான ஒரு உணர்வு. இது இலக்கியம், கலை, இசை மற்றும் தத்துவம் ஆகியவற்றில் பல நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால், உளவியல் ரீதியாகப் பார்க்கும்போது, காதல் ஒரு சரியான அல்லது தவறான உணர்வா? இந்த வினாவுக்குப் பதிலளிப்பது அவ்வளவு எளிதல்ல. உளவியல், காதலை ஒரு நேர்மறையான, ஆரோக்கியமான அனுபவமாகவும், அதே நேரத்தில் சில சமயங்களில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு சவாலான பயணமாகவும் பார்க்கிறது. இந்த விரிவான ஆய்வில், உளவியல் கண்ணோட்டத்தில் காதலின் பல்வேறு அம்சங்களைப் புரிந்துகொள்ள முயற்சிப்போம்.

## காதல் பற்றிய உளவியல் விளக்கம்

உளவியல் ரீதியாக, காதல் என்பது வெறும் உணர்ச்சி மட்டுமல்ல, அது ஒரு சிக்கலான உயிரியல், சமூக மற்றும் மனநல நிகழ்வுகளின் தொகுப்பு. காதலில் ஈடுபடும்போது, நமது மூளையில் டோபமைன், செரோடோனின் மற்றும் ஆக்சிடோசின் போன்ற ஹார்மோன்கள் வெளியிடப்படுகின்றன. டோபமைன் மகிழ்ச்சி மற்றும் வெகுமதி உணர்வுகளை உருவாக்குகிறது, இது ஒரு நபருடன் இருக்கும்போது நமக்கு உற்சாகத்தைத் தருகிறது. ஆக்சிடோசின், 'காதல் ஹார்மோன்' என்று அழைக்கப்படுகிறது, இது பிணைப்பு மற்றும் நம்பிக்கை உணர்வுகளை வலுப்படுத்துகிறது. இந்த ஹார்மோன்களின் செயல்பாடுதான் ஒருவரை நாம் ஈர்க்கிறோம், நேசிக்கிறோம் மற்றும் அவர்களுடன் நீண்டகால உறவுகளை வளர்த்துக் கொள்கிறோம். அதுமட்டுமல்லாமல் உளவியல் ரீதியாக நோக்கின் ஒருவர் பல பிரச்சனைகளை தம் வாழ்வில் எதிர்கொண்டு ஒவ்வொரு நாளும் கடந்து செல்லுகின்றனர். அதில் ஒன்றாக யாரும் இல்லை என்ற தனிமை உணர்வை கூற முடியும். அதாவது தனது குடும்பத்தில் தன்னை யாரும் கவனிக்காத நேரம் தன்னை ஒரு வெறும் கூடாக தம்மையே ஒதுக்கும் நிலைக்கு பலரிடம் ஏற்படும் .இது அனைவருக்கும் மனதில் எழும் எண்ணமாகும். அதில் தம்மை காத்துக் கொள்ள தன் தனிமை உணர்வை இல்லாமல் செய்வதற்கு ஒரு துணையைத் தேடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் அதிலும் காதல் துளிர் விடுகிறது. காதல் எனும் சொல்லைத் தற்கால ஆணும் பெண்ணும் பயன்படுத்துகின்றமையை உளவியல் ரீதியாக நோக்க முடியும்.

உளவியலாளர்கள் காதலைப் பல வகைகளாகப் பிரிக்கின்றனர். எரிக் பிரோம் , உளவியலாளர் மற்றும் தத்துவஞானி, காதலை ஒரு கலையாகக் கருதினார், ஸ்டெர்ன்பெர்க் தனது காதலின் முக்கோணக் கோட்பாட்டில் , காதலுக்கு மூன்று முக்கிய கூறுகள் இருப்பதாகக் கூறுகிறார்: நெருக்கம் , ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு . இந்தக் கூறுகளின் கலவையைப் பொறுத்து, காதல் பல வகைகளாகப் பிரிகிறது.

## காதலின் பிரிவுகள்

- தோழமை காதல்: இது ஒரு ஆழமான பாசம் மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய காதல். இதில் பாலியல் ஆர்வம் குறைவாக இருந்தாலும், பரஸ்பர மரியாதை, நம்பிக்கை மற்றும் நெருக்கம் அதிகமாக இருக்கும். இது பொதுவாக நீண்டகால திருமணங்கள் மற்றும் ஆழமான நட்புகளில் காணப்படுகிறது.
- ஆர்வம் மிக்க காதல்: இது தீவிரமான உணர்ச்சி, பாலுறவு ஈர்ப்பு மற்றும் ஆரம்பகால உறவுகளில் காணப்படும் உற்சாகம் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிறது. இந்த வகையான காதல் பெரும்பாலும் குறுகிய காலமே நீடிக்கும், ஆனால் அதன் தாக்கம் மிகவும் வலிமையானது.
- முழுமையான காதல்: ஸ்டெர்ன்பெர்க்கின் கோட்பாட்டின்படி, இது நெருக்கம், ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய மூன்று கூறுகளையும் முழுமையாகக் கொண்ட ஒரு அரிதான வகை காதல். இது ஒரு இலட்சியமான காதல் வடிவம், இதை அடைவது மிகவும் கடினம்.
- சுயநலமற்ற காதல்: இதில் ஒரு நபர் தனது சொந்த நலன்களை விட மற்றவரின் நலன்களைப் பெரிதாக மதிப்பிடுவார். இது தியாகம் மற்றும் சுயநலமின்மையின் உச்சகட்டம். பெற்றோர் தங்கள் குழந்தைகள் மீது வைக்கும் காதல் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

## காதலில் உள்ள சவால்கள்

காதல் ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தாலும், அது சில சவால்களையும் கொண்டுள்ளது. இந்த சவால்கள் உறவைச் சிதைக்கலாம் அல்லது அதை மேலும் வலுப்படுத்தலாம்.

- தொடர்பு சிக்கல்கள்: காதலில் உள்ள மிகப்பெரிய சவால்களில் ஒன்று, திறம்பட தொடர்புகொள்வதில் உள்ள சிரமங்கள். எதிர்பார்ப்புகள், உணர்வுகள் மற்றும் தேவைகளைப் பற்றி வெளிப்படையாகப் பேச முடியாதபோது, தவறான புரிதல்கள் மற்றும் மோதல்கள் உருவாகின்றன.
- நம்பிக்கையின்மை: நம்பிக்கை ஒரு உறவின் அடித்தளம். துரோகம், பொய் சொல்வது அல்லது ரகசியங்களை மறைப்பது போன்ற செயல்கள் நம்பிக்கையைச் சிதைத்து, உறவில் ஆழமான காயங்களை ஏற்படுத்தலாம்.
- சுயநலமின்மை தனித்துவம்: காதலில், ஒருவருக்கு மற்றொருவருக்காகத் தியாகம் செய்ய வேண்டியிருக்கும். ஆனால், இது தனது தனிப்பட்ட அடையாளத்தையும் தேவைகளையும் முற்றிலும் இழக்க வழிவகுக்கும்போது, மனநலப் பிரச்சினைகள் ஏற்படலாம்.
- மனநலப் பிரச்சினைகள்: காதலில் ஏற்படும் தோல்வி, துரோகம் அல்லது பிரிதல் போன்ற அனுபவங்கள் மனச்சோர்வு, பதட்டம் மற்றும் மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும்.
- சமூக மற்றும் கலாச்சார அழுத்தங்கள் : சில சமயங்களில், சமூக அல்லது குடும்ப எதிர்பார்ப்புகள் காதலில் அழுத்தத்தை ஏற்படுத்தலாம். உதாரணமாக, வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரை நேசிப்பது அல்லது குடும்பத்திற்குப் பிடிக்காத ஒருவரைத் திருமணம் செய்வது போன்ற சவால்கள்.

## நேர்மறை தாக்கங்கள்:

- மனநல மேம்பாடு: ஆரோக்கியமான காதலில் இருப்பவர்கள் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும், திருப்தியாகவும் உணர்கிறார்கள். இது மனச்சோர்வு மற்றும் பதட்டம் போன்ற மனநலப் பிரச்சினைகளைக் குறைக்கிறது.
- உடல் ஆரோக்கியம்: ஆராய்ச்சிப்படி, வலுவான உறவுகளில் இருப்பவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள், சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுள்ளார்கள். காதல் மன அழுத்த ஹார்மோன்களின் அளவைக் குறைத்து, இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.
- தனிப்பட்ட வளர்ச்சி: காதல் ஒருவரைப் பொறுமையாகவும், அனுதாபத்துடனும், புரிந்துணர்வுடனும் இருக்கக் கற்றுக்கொடுக்கிறது. இது ஒருவரின் சுய வளர்ச்சிக்கு உதவுகிறது.
- சமூக ஆதரவு: காதலில் இருக்கும்போது, நமக்கு உணர்ச்சிபூர்வமான ஆதரவு கிடைக்கிறது. கடினமான காலங்களில் ஒரு துணை இருப்பது நமக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் தருகிறது.

## எதிர்மறை தாக்கங்கள்:

- சார்புநிலை மற்றும் இழப்பு பயம்: ஒரு நபர் தனது துணை இல்லாமல் வாழ முடியாது என்று நினைக்கும்போது, அது ஆரோக்கியமற்ற சார்புநிலையை உருவாக்கும். இதனால், துணை இழப்பு பற்றிய பயம் அதிகமாகும்.
- உறவுக் கொடுமை : சில சமயங்களில், காதல் என்பது கட்டுப்படுத்துதல், உணர்ச்சி ரீதியான அல்லது உடல் ரீதியான கொடுமைகளாக மாறலாம். இது பாதிக்கப்பட்டவர்களின் மனநலத்தையும் சுயமரியாதையையும் கடுமையாகப் பாதிக்கும்.
- பிரிவு மற்றும் மனச்சோர்வு: காதல் உறவுகள் முடிவடையும்போது, அது ஆழ்ந்த சோகத்தையும் மனச்சோர்வையும் ஏற்படுத்தும். இது ஒரு நபரின் வாழ்க்கையை நீண்ட காலத்திற்குப் பாதிக்கும்.
- தனிப்பட்ட அடையாள இழப்பு: தனது துணையின் தேவைகளுக்காகத் தனது ஆசைகள், கனவுகள் மற்றும் அடையாளத்தை முழுவதுமாக விட்டுக்கொடுக்கும்போது, அது தன்நம்பிக்கை மற்றும் சுயமரியாதையை இழக்க வழிவகுக்கும்.

## காதலைக் கையாளும் வழிமுறைகள்

- திறந்த மற்றும் நேர்மையான தொடர்பு: உங்கள் உணர்வுகள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் பற்றி உங்கள் துணையிடம் வெளிப்படையாகப் பேசுவது அவசியம். ஒருவருக்கொருவர் செவிசாய்ப்பதும், புரிந்துகொள்வதும் மிகவும் முக்கியம்.
- பரஸ்பர மரியாதை: உங்கள் துணையின் கருத்துக்கள், மதிப்புகள் மற்றும் தனிப்பட்ட எல்லைகளை மதிக்க வேண்டும். இது ஆரோக்கியமான உறவுக்கு அடிப்படை.
- சுய அக்கறை: ஒரு உறவில் இருக்கும்போது, உங்களைப் பற்றி நீங்களே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் தனிப்பட்ட ஆசைகள், பொழுதுபோக்குகள் மற்றும் நண்பர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது உங்கள் சுயமரியாதையைப் பாதுகாக்கும்.

# கொமர்ஷல் வங்கி UNICEF உடன் இணைந்து முன்பள்ளி கல்விக்கு ஆதரவு



கொமர்ஷல் வங்கி கல்விக்கான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், யுனிசெஃப் உடனான கூட்டு முயற்சியின் கீழ் இலங்கையில் பாலர் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் மொனராகலை மாவட்டத்தில் உள்ள மடகமவில் முழுமையாக புதுப்பிக்கப்பட்ட முத்துக்குமரன முன் பள்ளியை அப்பாடசாலையின் நிர்வாகத்திடம் அண்மையில் கையளித்தது.

பாடசாலையை கையளிக்கும் இந்நிகழ்வில், கொமர்ஷல் வங்கியின் ஊவா -சப்ரகமுவ பிராந்தியத்தின் பிராந்திய முகாமையாளர் சமிந்த கலுகமகே மற்றும் மொனராகலை கிளை முகாமையாளர் உபாலி மாரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். யுனிசெப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொடர்பாடல், ஆலோசனை மற்றும் பங்குடைமைகளின் தலைவர் பிஸ்மார்க் ஸ்வாங்கின் மற்றும் கல்வி அதிகாரி சுகத் அதிகாரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொமர்ஷல் வங்கியின் பங்களிப்பானது, பாடசாலையின் கட்டிட உள்கட்டமைப்பை முழுமையாகப் புதுப்பிக்கவும், தரமான தளபாடங்கள் மற்றும் மாணவர்களின் வயதுக்கு ஏற்ற கற்றல் உபகரணங்களை வழங்கவும், விளையாட்டு மூலம் குழந்தைகளுக்கு கற்றலுக்கு உகந்த சூழலை உருவாக்கவும் உதவியது.

இந்தத் திட்டத்தின் பரந்த நோக்கங்களில் ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாடு, பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களிடையே விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக உள்ளூர் மற்றும் தேசிய பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

கொமர்ஷல் வங்கியின் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) யுக்தியில் கல்வி ஒரு முக்கிய தூணாக திகழ்கிறது. வங்கியானது இன்றுவரை, இலங்கையின் 25 மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு 386 தகவல் தொழில்நுட்ப (IT) ஆய்வு கூடங்களை நன்கொடையாக வழங்கியுள்ளதுடன் 180 அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மற்றும் கணிதத்தை (STEM) மையமாகக் கொண்ட வகுப்பறைகளை நிறுவுவதற்கு ஆதரவளித்துள்ளது, மேலும், 165 பாடசாலைகளை டிஜிட்டல் கற்றல் உள்கட்டமைப்போடு பொருத்திய தேசிய ஸ்மார்ட் பாடசாலையாக மாற்றும் முயற்சியில் முன்னணி பங்காற்றியுள்ளது. டிஜிட்டல் கற்றல் அணுகலை மேம்படுத்த, வங்கியின் சிப்னேனா இணையத்தள கல்வி தகவு நடைமுறை வீடியோக்கள் மற்றும் ஊடாடும் பொருட்கள் உட்பட டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பாடசாலை பாடத்திட்ட உள்ளடக்கத்தை வழங்குகிறது.

உலகின் முதல் 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழ்வதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. தனியார் துறையின் மிகப்பாரிய கடன் வழங்குநராக விளங்கும் கொமர்ஷல் வங்கி, SME துறையினருக்கு பாரியளவில் கடனுதவி வழங்கும் கடன் வழங்குநராகவும் உள்ளது. மேலும் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் திகழும் இவ்வங்கி இலங்கையின் முதலாவது 100% காபன்-நடுநிலைமையை பேணும் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி நாடளாவிய ரீதியில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பை செயற்படுத்தி வருகிறது.

# Clover Signature Villas உரிமையாளர்களிடம் கையளிப்பு




Prime Group, தனது Clover by Prime Signature Villas திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்து, அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வை அண்மையில் கொண்டாடியிருந்தது. தனது ஒவ்வொரு நிர்மாணத்திட்டங்களிலும், தரம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை விவரங்களில் நுணுக்கமாக கவனம் செலுத்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு முதலிடம் அளித்தல் எனும் கோட்பாடுகளைப் பேணும் Prime Group இன் அர்ப்பணிப்பை மேலும் வெளிப்படுத்துவதாக இந்தத் திட்டத்தின் பூர்த்தி அமைந்துள்ளது.

Clover இல் 54 சொகுசு விலாக்கள் அமைந்திருப்பதுடன், அவை 16 பிரத்தியேகமான வடிவமைப்புகளில் காணப்படுகின்றன. தலவத்துகொட பகுதியில் அமைதியான 4.5-ஏக்கர் காணியில் இந்தத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

Prime Group'இன் இணை-தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "Prime Group'இன் 28ஆவது விலா பூர்த்தியை நாம் இன்று கொண்டாடுகிறோம். 28ஆவது விலா சமூகத்தாருக்கும் மற்றும் இதுவரையில் குழுமத்தினால் 39 தொடர்மனைத் தொகுதிகளும் நிர்மாணிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அதனூடாக, வாழ்வுக்கு வளமூட்டும் இல்லங்களை விநியோகிப்பதில் எமது அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. Clover இல் காணப்படும் ஒவ்வொரு அம்சமும், அலங்காரம், சௌகரியம் மற்றும் சமூகம் ஆகியவற்றில் Prime'இன் அதீத ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. மேலும், தற்போது 3,000க்கும் அதிகமான அலகுகள் நிர்மாணிக்கப்பட்ட வண்ணமுள்ள நிலையில், இலங்கையின் பொருளாதாரத்துக்கு Prime Group பெருமளவு பங்களிப்பு வழங்கப்பட்ட வண்ணமுள்ளது. அவற்றினூடாக, ஆயிரக் கணக்கான தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், வரி வருமானமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. Primeஇல், வாழ்க்கை முறைகளை வடிவமைத்து, ரியல் எஸ்டேட் தொழிற்துறையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். இந்த மைல்கல் பூர்த்தியானது, Clover குடும்பத்தாருக்கு மகிழ்ச்சிகரமான தருணங்களின் ஆரம்பமாக அமைந்திருப்பதுடன், இலங்கையின் ரியல் எஸ்டேட் தொழிற்துறையை மாற்றியமைப்பதில் நாம் தொடர்ச்சியாக காண்பிக்கும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது."

Prime Groupஇன் நீண்ட நாள் வாடிக்கையாளர்களில் ஒருவரான ரெக்ஸ் குணதிலக கருத்துத் தெரிவிக்கையில், "எனக்கும், Clover Villasஇன் உரிமையாளர்களாக திகழும் அனைவருக்கும் இன்று மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாகும். நான் Prime இன் நீண்ட கால வாடிக்கையாளராக திகழ்வதுடன், இது எனது மூன்றாவது முதலீடாகும். Prime Group இன் வலிமையான செயற்பாட்டை நான் பாராட்டுகிறேன். அவர்களின் வாடிக்கையாளர் சேவை மற்றும் பணிகளில் ஈடுபட்ட அணியினர் சிறப்பாக செயலாற்றியிருந்தனர். நான் நிர்மாணப் பணிகளின் போது சில தடவைகள் விஜயம் செய்திருந்தேன். பெரும்பாலும் முன்னறிவித்தல்கள் எதுவுமின்றி வந்திருந்தேன். எவ்வாறாயினும், அனைவரும் ஆதரவாக இருந்தனர். மேலதிகாரியுடன் என்னால் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடிந்திருந்தது. அவரும், அவரின் அணியினரும் சுமூகமாக பதிலளித்திருந்தனர். Primeஇல் நான் அவதானித்த பிரத்தியேகத் தன்மையாக இது அமைந்திருந்ததுடன், நட்பான சூழல் உருவாக்கப்பட்டிருந்தது. வாடிக்கையாளர்களின் மீது அக்கறையுடன் செயலாற்றும் தவிசாளர் மற்றும் இணை-தலைமை அதிகாரிக்கு நான் நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். Primeஇல் முதலீடு செய்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன்." என்றார்.

இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் Prime Group இன் தலைமைத்துவத்தை நோக்கிய பயணத்துக்கு இது போன்ற திட்டங்கள் மேலும் வலுவூட்டுகின்றன. உறுதியான அடித்தளம் மற்றும் பரந்த பிரிவுகளுடன் சந்தையின் முன்னோடி எனும் நிறுவனத்தின் கீர்த்திநாமத்தை மேலும் உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.



பேங்கொக்

இராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில்

# 21 பேர் பலி

மியன்மாரில் இராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளனர்.

நம் அண்டை நாடான மியன்மாரில், ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை கவிழ்த்து, 2021இல் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. அப்போது ரக்கைன் பிராந்தியம் மோசமாக பாதிக்கப்பட்டது. அப்பகுதியைச் சேர்ந்த 7.4 இலட்சம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் வெளிநாடுகளுக்கு அகதியாக சென்றுள்ளனர். இதையடுத்து, இராணுவத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்திய பழங்குடியின குழுக்கள் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளர். அப்போது முதல் அந்நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இந்நிலையில், இரத்தின சுரங்கத் தொழிலின் மையமான மொகோக் நகரில் கிளர்ச்சியாளர்கள் தங்கி இருப்பதாக இராணுவத்திற்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, அப்பகுதியில் இராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில், ஒரு கர்ப்பிணிப்பெண் உட்பட 21 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவம் நடத்திய தாக்குதலை ஆயுதமேந்திய எதிர்க்கட்சி குழு, உள்ளூர்வாசிகள் உறுதி செய்துள்ளனர். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில், சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இராணுவம் நடத்திய தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை கிளப்பியுள்ளது.

கனடா

பணிப்பெண்கள் வேலை நிறுத்தம்

# 600 விமானங்கள் இரத்து

கனடாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான எயார் கனடா நிறுவனத்தின் சுமார் 10 ஆயிரம் பணிப்பெண்கள் பணி நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் சுமார் 600 விமான போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





கனடாவின் மிகப்பெரிய விமான போக்குவரத்து நிறுவனம் எயார் கனடா. இதில் சுமார் 10 ஆயிரம் பணிப்பெண்கள் பணி புரிந்து வருகின்றனர். அவர்கள் சம்பள உயர்வு, விமானத்தில் செலவழித்த நேரத்துக்கு ஏற்றாற்போல் இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், அவர்களது கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனவே, தங்களது கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் பணி நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சுமார் 600க்கும் மேற்பட்ட விமானங்கள் அங்கு இரத்து செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக சுமார் 1 இலட்சத்து 30 ஆயிரம் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

"இது தான் நேரம்"

# ட்ரம்ப் மனைவி புட்டினுக்கு கடிதம்

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் ஆங்கரேஜ் நகரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் சனிக்கிழமை(16) அன்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த சந்திப்பில் உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் நிறுத்தம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், ரஷ்யா அதிபர் புட்டினும் சுமார் 3 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன் பின் இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது ரஷ்ய ஜனாதிபதி புட்டின், எங்களுக்கு இடையே நடந்த போர் நிறுத்தம் பற்றிய பேச்சுவார்த்தையின் மூலம் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுயுள்ளது என்று கூறினார்.

பின்னர் பேசிய டிரம்ப், போர் நிறுத்தம் தொடர்பாக இன்னும் எந்த ஒப்பந்தமும் எட்டப்படவில்லை என தெரிவித்தார். மேலும், "ஒப்பந்தத்தை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு இப்போது உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியிடம் உள்ளது.

ஐரோப்பிய நாடுகளும் இதில் சிறிது தலையிட வேண்டும். ஆனால், முக்கிய பொறுப்பு ஜெலென்ஸ்கியிடம் உள்ளது" என்று கூறினார்.

இதனிடையே அலாஸ்காவில் நடந்த பேச்சுவார்த்தையின்போது, புட்டினிடம் ட்ரம்ப் தனது மனைவி மெலனியா எழுதிய கடிதத்தை வழங்கினார்.



அதில், உக்ரைனில் போரால் பாதிக்கப்படும் குழந்தைகளைப் பற்றி பரிசீலிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அக்கடிதத்தில், "புவியியல், அரசாங்கம் மற்றும் சித்தாந்தத்திற்கு மேலே நிற்கும் ஒரு அப்பாவித்தனம் கொண்ட குழந்தைகளைப் பற்றிச் சிந்திக்குமாறுகேட்டுக்கொள்கிறேன். மோதலில்சிக்கியகுழந்தைகளின்மெல்லிசைசிரிப்பைஉங்களால்மீட்டெடுக்கமுடியும். இந்தகுழந்தைகளின்அப்பாவித்தனத்தைப்பாதுகாப்பதில், நீங்கள்ரஷியாவிற்குமட்டும்சேவைசெய்வதைவிடஅதிகமாகச்செய்வீர்கள்என்றுநம்புகிறேன். இந்தகுழந்தைகளுக்கு நீங்கள்பேனாவால்கையெழுத்திடுவதுமூலம்உதவமுடியும்" என்றுமெலனியாதெரிவித்தார்.

ஸ்ரீநகர்

ஜம்மு–காஷ்மீரிலும் மேக வெடிப்பு;

# பலர் பலி; 6 பேர் காயம்

## மண்சரிவில் சிக்கி 60 பேர் பலி; 82 பேர் மாயம்



ஜம்மு-காஷ்மீரில் ஞாயிற்றுக்கிழமை (17) அன்று ஏற்பட்ட மேக வெடிப்பில் பலர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் காயமடைந்தாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஜம்மு-காஷ்மீரின் கிஷ்துவார் மாவட்டத்தில் உள்ள சிசோட்டி கிராமத்தில், கடந்த 14இல் திடீர் மேகவெடிப்பால் கனமழை கொட்டித் தீர்த்துள்ளது. இதனால் சிசோட்டியை ஒட்டிய மலைப்பாதையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கடைகள், வீடுகள், ஹோட்டல்கள், வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.



# 21 வயதில் இங்கிலாந்து அணியின் தலைவர்

## 136 ஆண்டுகால சாதனையை முறியடித்தார் பெத்தேல்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் டி20 போட்டி செப்டம்பர் 17ஆம் திகதி நடைபெற உள்ளது. 2 மற்றும் 3ஆவது போட்டிகள் முறையே செப்.19 மற்றும் 21ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

இந்நிலையில் இந்த தொடருக்கான இங்கிலாந்து அணி சனிக்கிழமை (16) அறிவிக்கப்பட்டது. இங்கிலாந்து டி20 அணியின் வழக்கமான அணித்தலைவர் ஹாரி புரூக்கிற்கு இந்த தொடரில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக புதிய தலைவராக சகலதுறை வீரர் ஜேக்கப் பெத்தேல் (வயது 21) நியமிக்கப்பட்டார்.

இதன் மூலம் இங்கிலாந்து ஆண்கள் கிரிக்கெட் வரலாற்றில் இளம் கேப்டன் சாதனையை ஜேக்கப் பெத்தேல் படைத்தார். இதற்கு முன்பு மான்டி பவ்டன் 1889 ஆம் ஆண்டு தன்னுடைய 23 வயதில் இங்கிலாந்து அணியின் தலைவனாக நியமிக்கப்பட்டதே சாதனையாக இருந்தது. அவரது 136 ஆண்டு கால சாதனையை பெத்தேல் முறியடித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியா



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியாவும், இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்காவும் வென்ற நிலையில், கெய்ன்ஸில் சனிக்கிழமை(16) நடைபெற்ற மூன்றாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றே 2-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்கா: 172/7 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: டெவால்ட் பிறெவிஸ் 53 (26), றஸி வான் டர் டுஸன் ஆ.இ 38 (26), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 25 (23), லுஹான்-ட்ரீ பிறிட்டோறியஸ் 24 (15) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: நாதன் எலிஸ் 3/31 [4], அடம் ஸாம்பா 2/24 [4], ஜொஷ் ஹேசில்வூட் 2/30 [4], கிளென் மக்ஸ்வெல் 0/15 [2])

அவுஸ்திரேலியா: 173/8 (19.5 ஓவ.)
(துடுப்பாட்டம்: கிளென் மக்ஸ்வெல் ஆ.இ 62 (36), மிற்செல் மார்ஷ் 54 (37) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: கொர்பின் பொஷ் 3/26 [4], ககிஸோ றபாடா 2/32 [4], ஏய்டன் மார்க்ரம் 1/6 [2])

போட்டியின் நாயகன்: கிளென் மக்ஸ்வெல்

தொடரின் நாயகன்: டிம் டேவிட்.

ஆசிய கோப்பை:

# பும்ரா விளையாடுவாரா?



நடப்பு சாம்பியன் இந்தியா உள்பட 8 அணிகள் பங்கேற்கும் 17ஆவது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்டம்பர் 9-ந்திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறுகிறது. அடுத்த வருடம் நடைபெற உள்ள ஐ.சி.சி. டி20 உலகக்கோப்பைக்கு ஆசிய அணிகள் தயாராகும் பொருட்டு இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடரில் பங்கேற்றுள்ள அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறும். இதில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை செப்.10ஆம் திகதி துபாயில் சந்திக்கிறது.

இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்.14ஆம் திகதி துபாயிலும், ஓமனை செப்.19ஆம் திகதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி செப்.28ஆம் திகதி துபாயில் அரங்கேறுகிறது. இந்த தொடருக்கான இந்திய அணி எதிர்வரும் 19ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.



# சஞ்சோவின் முடிவுக்காகக் காத்திருக்கும் யுனைட்டெட்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான ஜடோன் சஞ்சோவை கடனடிப்படையில் வாங்கும் தெரிவுடன் இத்தாலிய சீரி ஏ கழகமான றோமா கைச்சாத்திடுவதை ஏற்க யுனைட்டெட் தயாராகியுள்ளது.

எனினும், 25 வயதான சஞ்சோ இறுதி முடிவு எடுப்பதற்காக யுனைட்டெட் காத்திருக்கிறது.

# மியூனிச் செல்லும் என்குங்கு?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான கிறிஸ்டோபர் என்குங்குவைக் கைச்சாத்திடுவது தொடர்பான பேச்சுக்களை ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏறத்தாழ 40 மில்லியன் யூரோக்களுக்கு என்குங்குவை வெளியேற செல்சி அனுமதிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 18, ஓகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.